## சுதந்திர தின விழாவையொட்டி

# காரைக்காலில் கலை நிகழ்ச்சி



காரைக்கால், நவ.8: நாட்டின் 75 வது ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி புதுச்சேரி கலை பண்பாட்டுத்துறை சார்பில் தஞ்சை தென்னகப் பண்பாட்டு நடுவம் மற்றும் காரைக்கால் மாவட்ட நிர்வாகம் இணைந்து காரைக்காலம்மையார் கோயில் கலையரங்கில் கலைநிகழ்ச்சி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் ஏராளமான இசைக்கலைஞர்கள் மற்றும் நடனக் கலைஞர்கள் கலந்துகொண்டு கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றம் செய்தனர். புதுச்சேரி போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா டிரம்ஸ் அடித்து நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார். நாதஸ்வரம், மேளம், சாக்ஸோபோன், தபேலா, எலெக்ரிக்வயலின், கிதார், டிரம்ஸ், கீ- போர்டு உள்ளிட்ட இசைக்கருவிகளை கொண்டு நடத்தப்பட்ட இசை நிகழ்ச்சியை பார்வையாளர்கள் ரசனையுடன் கண்டு மகிழ்ந்தனர். இதில் கரகாட்டம், காவடியாட்டம் உள்ளிட்ட கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. ஏராளமானோர் கலைநிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர்.